முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் சித்திரை மாதம் 12ம் திகதி முதல் சித்திரை மாதம் 19ம் திகதி வரை**

**(25.04.2021 ஞாயிறு முதல் 02.05.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமபலம் வையகம் பெற
   தன்னிகரில்லா அவதாரம் புரிந்த
   ஆறுமுகனார் சக்தியான தேசிகனே
   அரங்கனே நீ கேட்க இனிதே
2. இனிதே பிலவ தகர் திங்களில்
   இயம்பிட வியதிகதி மேல் மூவாறோர்திகதி வரை
   கனிவான இந்தியா தமிழகத்தில்
   கண்டுரைப்பேன் நடக்கும் நிகழ்வாக
3. நிகழ்வாக எதிர்கால பலன்குறித்த ஆசி
   நிகழ்த்துவேன் அகத்திய மகரிஷியும்
   மிகையாக வெப்பநிலை கூடி
   மக்களுக்கு பிணி சோடை அனுகி அகலும்
4. அகலாது நச்சுக்கிருமி அல்லலும்
   அச்சுறுத்தும் இந்தியா தமிழகத்தை
   வாகடமாக ஊசி மருந்துகள்
   வளர்ந்தாலும் மக்களை நோக்கி விரைந்தாலும்
5. விரைந்தாலும் கிருமி தாக்கலும்
   விடாது மக்களை தொடர நேரும்
   திரையாக மக்களிடை சூழ்ந்த
   தெரிவிப்பேன் உயிர்கொலை அசைவ
6. அசைவ செயல்முறை அகன்று
   அன்பான தயவான வாழ்வுமுறை
   இசைவாக மக்கள் ஏற்று
   எவ்வுயிர்க்கும் துன்பம் தராவண்ணம்
7. வண்ணமுடன் சன்மார்க்க நெறியை
   வணங்கி மக்கள் வந்தால்தான்
   எண்ணம் வழி தூய்மைகூடி
   எவ்வுயிரும் சமம் எனும் தர்மம்

8. தர்மசிந்தை பரவி வளர்ந்து
தலைமைகள் அதிகாரிகளென
நேர்மை எங்கும் திளைத்து
நிலவுலகே நீதிகாக்கும் சக்திகூடி

9. கூடியே எதிர்வினை விலகிட
கிருமி வழி துன்பம் அகன்று
நாடிடும் இந்தியாதமிழகத்தில் பாதுகாப்பு
நன்மைதரும் ஆளுமையாக சிறந்து

10. சிறந்துமே மக்களின் வாழ்வாதாரம்
சீர்கெடா தேவைகள் பூர்த்திபட
சிறந்த ஞான ஆளுமையாக மாறும்
செப்பிய அகத்திய மகரிஷியின் வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

பிலவ வருடம் சித்திரை மாதம் 12ம் நாள் 25.04.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் பிலவ வருடம் சித்திரை மாதம் 19ம் நாள் 02.05.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள்:

கலியுக துன்பத்தில் உள்ள இவ்வுலகம் தர்மபலம் பெற்று மேன்மையடைய வேண்டியே முருகப்பெருமானின் வல்லமையுடன் தன்னிகரில்லா அவதாரமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே தாம் எம்மிடம் கேட்க பிலவ வருடம் சித்திரை மாதம் 12ம் நாள் 25.04.2021 ஞாயிற்று கிழமை முதல் சித்திரை 19ம் நாள் 02.05.2021 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் இந்தியாவிலும் தமிழகத்திலும் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வரும் நாட்களில் நாட்டினில் வெப்பநிலை அதிகமாகி மக்களுக்கு வெப்ப நோய்களை உண்டுபண்ணும். அதனால் மக்களுக்கு வெப்ப உபாதைகள் உண்டாகி பின் அகலும் ஆனால் இயற்கை பேரிடரான நச்சுக் கிருமிகள் மூலமாக வருகின்ற துன்பங்களும் தொற்று பயமும் அதிகமாகும்.

தொற்றினை தடுக்க அரசும் தடுப்பு மருந்துகளை மக்களிடத்து விரைந்து செலுத்தி மக்களை காக்க முயற்சித்தாலும் நோய் பரவல் வேகம் அதிகமாகி மக்களை தொடர்ந்து துன்பத்தில் ஆழ்த்தும்.

மக்களிடத்து மாயையினால் உண்டான அசைவ உணவு பழக்கம் மக்களின் சிந்தையை மறைத்து உயிர்கொலை பாவம் என்பதையே மறந்து தொடர்ந்து அசைவ உணவினை உண்பதை தவிர்த்தால்தான் விடுபட முடியும்.

மக்களிடம் உண்டான உயிர்கொலைதனை தவிர்த்து புலால் மறுத்து சுத்தசைவ உணவினை மனம் விரும்பி ஏற்று எவ்வுயிர்க்கும் துன்பம் தராமல் உலக உயிர்களிடத்து தயவுடன்

நடந்து சுத்த சன்மார்க்க நெறியை பின்பற்றி கடவுள் நம்பிக்கையுடன் தெய்வீக வழிபாடுகளை செய்து வந்தால்தான் அவர்களது எண்ணங்கள் தெளிவும் தூய்மையும் அடைந்து எவ்வுயிரும் சமம் எனும் உணர்வும் தர்ம சிந்தை வளரும்.

மக்களிடத்து எவ்வுயிரும் சமம் எனும் தர்மசிந்தை பரவி வளர்ந்து தலைவர்களிடத்தும் அதிகாரிகளிடத்தும் நேர்மை பெருகி சம நீதி சமதர்மம் பெருகி நாட்டினை அச்சுறுத்தும் பாவ வினைகள் விலகிட மக்களின் பாவத்தின் பலனால் உண்டான கிருமி வழியினால் உண்டான துன்பம் எல்லாம் மக்களை விட்டு அகன்று இந்தியாவும் தமிழகமும் கிருமி தாக்குதல் இல்லாத வகையில் நல்ல பாதுகாப்பை பெறும். நாட்டை ஆட்சி செய்வோர் நல்லாட்சி புரிவோராய் சிறந்து விளங்கி நல்லாட்சி உண்டாகி மக்களின் வாழ்வாதாரம் சீர்கெடாமல் மக்களின் அத்தியாவசிய அடிப்படை தேவைகள் எல்லாம் பூர்த்தியாகி ஆட்சிமுறை சிறப்பான ஞான ஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—